| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| மருத்துவர் எம். வீரப்பன் இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சித்தலைவர்,<br>செங்கல்பட்டு மாவட்டம். | மக்கள் செய்தி தொடர்பு அலுவலர்,<br>மக்கள் செய்தி தொடர்பு அலுவலகம்,<br>செங்கல்பட்டு மாவட்டம். |

**ந.க.எண்.901/அ6/2026 நாள் : .10.2026**

பொருள் : தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் - உள்ளாட்சி அமைப்பு நிறுவனங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்பு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் - 2026-27 இரண்டாவது கட்டமாக 15 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துதல் - மாநில வள பயிற்றுநர் தேர்வு செய்ய விண்ணப்பங்கள் பெற்றிட பத்திரிக்கை செய்தி வெளியிடுதல் - தொடர்பாக.

பார்வை : மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், அவர்களின் கடித ந.க.எண் : TNCDW/402/2026/PC-1 நாள் : 29.09.2026.

-----

பார்வையில் காணும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அவர்களின் கடிதத்தின்படி, உள்ளாட்சி அமைப்பு நிறுவனங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகள் ஒருங்கிணைந்த செயல்பாடுகளுக்காக தமிழ்நாட்டில் முதற்கட்டமாக 6 மாவட்டங்களில் இத்திட்டம் 2023-24 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் தேசிய திட்ட மேலாண்மைப்பிரிவு (NMMU) 2026-27 முதல் 15 மாவட்டங்களில் இரண்டாவது கட்டமாக இதனை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்பு நிறுவனங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளின் ஒருங்கிணைப்பு செயல்பாட்டிற்கென தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள நிலையான செயல்பாட்டு வழிமுறைகளுக்கேற்ப இத்திட்டத்தில் ஆரம்பநிலையில் மாநில வள பயிற்றுநர் பின்வரும் விவரப்படி தேர்வு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மாநில வள பயிற்றுநர்கள் (SRP) | மாநில வள பயிற்றுநர்கள் 3 மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 15 மாவட்டங்களுக்கு 5 நபர்கள் |

மாநில வள பயிற்றுநர்கான தகுதி, விண்ணப்பித்தல் மற்றும் தேர்வுமுறை ஆகியவற்றிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்படும் மாநில வள பயிற்றுநர் அவருக்கு ஒதுக்கப்படும் 3 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்பட மாவட்ட மற்றும் வட்டார வள பயிற்றுநர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

பார்வையில் காணும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அவர்களின் வழிகாட்டு நெறிமுறைக்கேற்ப மாநில வள பொறுப்பாளர்கள் தேர்வுக்கு தங்கள் மாவட்டத்திலுள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் அனைத்து விவரங்களையும் தவறாமல் செய்தி குறிப்பு வெளியிட்டும் பிரதான அரசு அலுவலகங்களில் செய்தி பலகைகளிலும் அறிவிப்பு செய்தும் கீழ்காணும் கால விவரப்படி பணியாளர்கள் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | குறிப்பு | நாள் |
|---|---|---|
| 1. | அறிவிக்கை வெளியிட வேண்டிய நாள் | 05.10.2026 |
| 2. | விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசி நாள் | 21.10.2026 |
| 3. | விண்ணப்பங்கள் பரிசீலனை செய்ய வேண்டிய நாள் | 22.10.2026 |
| 4. | எழுத்துத்தேர்வு | 27.10.2026 |
| 5. | நேர்முகத்தேர்வு | 30.10.2026 |

மேற்காணும், தகுதிகள் அடிப்படையில் மற்றும் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மாநில வள பயிற்றுநர் 21.10.2026-க்குள் வட்டாரங்களில் இருந்து தகுதியான விண்ணப்பங்கள் பெற்றிட பத்திரிக்கை செய்தி வெளியிட உத்தரவிடப்படுகிறது.

**இணைப்பு :- பத்திரிக்கை செய்தி**

மாவட்ட ஆட்சித்தலைவர்
செங்கல்பட்டு மாவட்டம்

## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் - செங்கல்பட்டு மாவட்டம் மாநில வள பயிற்றுநர்கள் விண்ணப்பங்கள் குறித்த பத்திரிகை செய்தி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் உள்ளாட்சி அமைப்பு நிறுவனங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டினை முழுமையாக்கும் திட்டப் பணியின் இரண்டாம் கட்ட செயல்பாடுகள் 15 மாவட்டங்களில் விரிவுபடுத்தப்படவுள்ளது. இதற்கென மாநில வள பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டத்திற்கான தற்காலிகப் பணியிடங்கள்

| வ.எண். | பணி விபரம் | பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | மாநில வளப் பயிற்றுநர் | ஒன்று (மூன்று மாவட்டத்திற்கு ஒருவர் என பின்னர் தேர்வு செய்யப்படுவர்) |

**மாநில வள பயிற்றுநர்களுக்கான மதிப்பூதியம் மற்றும் பயணப்படி விவரம்**

| வ. எண் | வள நபர்களின் விவரம் | மதிப்பூதியம் | கண்காணிப்பு, மேற்பார்வை மற்றும் ஆவணப்படுத்துதல் | பயணப்படி நாளொன்றுக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | மாநில வள பயிற்றுநர்கள் (SRP) | ரூ.1000/- அதிகப்பட்சம் 10 நாட்களுக்கு | ரூ.750/- அதிகப்பட்சம் 15 நாட்களுக்கு | ரூ.250/- 15 நாளுக்கு | ரூ.25,000/- அதிகப்பட்ச மாக |

**மாநில வள பயிற்றுநர் :-**

1. பெண்கள் மற்றும் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
2. கல்வித்தகுதி : சமூக கல்வி / சமூக அறிவியல்/ஊரக வளர்ச்சி / பெண்கள் கல்வி அல்லது சமூக பணியிடங்களில் ஏதேனும் ஒரு முதுகலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
3. வயது : 01.06.2026 அன்று 30-45 க்குள் இருக்க வேண்டும்.
4. அனுபவம் :10 ஆண்டுகள், சுயஉதவிக்குழு /கூட்டமைப்பில் பணியாற்றிய அனுபவம் /பயிற்றுநர் / சமூக பணி நிறுவனத்தில் பணியாற்றியது அல்லது அரசின் திட்டத்தில் ஊரக பணிகளில் பணியாற்றி இருக்க வேண்டும்.

**மேலும் மாநில வள பயிற்றுநர்கான கூடுதல் தகுதிகள் பின்வருமாறு :**

1. மொழி : தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுத, பேச தெரிந்திருத்தல்.
2. திறன் : தகவல் பரிமாற்றத்தில் தகுந்த திறன், ஒருங்கிணைப்பு, மனித உறவுகளை பேணுவதில் ஆற்றல், கைபேசி, செயலிகளை கையாள்வது. கணினியில் word, excel, இணைய பயன்படுத்துதலில் போதிய அறிவு பெற்றிருத்தல் அவசியம்.

இப்பதவிக்கான தகுதி மற்றும் விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பங்களை 21.10.2026-குள் விண்ணப்பம், தகுதி குறித்த சுய சான்றிட்ட நகல்களுடன் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. இப்பணியிடங்களுக்கு எழுத்துத்தேர்வு, நேர்காணல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.

இப்பணியிடங்கள் இத்திட்டத்திற்கான 24 மாத காலவரையறை கொண்ட தற்காலிக பணியிடங்களாகும்.

திட்ட இயக்குநர்
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
2 வது தளம், A பிளாக், மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம்

மேலும் விபரங்களுக்கு https://tncdw.org என்ற இணையதளத்தை அணுகலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
செங்கல்பட்டு மாவட்டம்